**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD) நிலையான வைப்பு**

**மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

**1. இதன் முக்கிய அம்சங்களும் நன்மைகளும்**

அ) கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

ஆ) சிரேஷ்ட பிரஜைகளுக்கு, பிரகடனப்படுத்தப்பட்ட வட்டி வீதங்களை விட அதிகமான 0.5% மேலதிக வருடாந்த வட்டியைப் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.

3. வட்டியினை மாதாந்தம், காலாண்டுக்கொருமுறை, அரையாண்டிற்கொருமுறை, வருடாந்தம் அல்லது முதிர்ச்சியடையும்போது பெற்றுக் கொள்ளலாம்.

ஈ) வைப்புத் தொகையில் ஆகக்கூடியது 80% வரை உடனடிக் கடன் வசதிகள்.

உ) தகைமை பெறுகின்ற வைப்பு பொறுப்புக்கள், ஒரு வைப்பாளருக்கு ஆகக் கூடியது ரூ.1,100,000.00 வரையான நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளக்கூடியதற்கு அமைவாக, காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

**வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள்**

அ) உரிய வட்டி வீதங்கள், நாடு முழுவதும் அமைந்துள்ள கம்பனியின் ஒவ்வொரு கிளைகளிலும், கம்பனியின் இணையத்தளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு, எமது வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் மீளமைக்கப்படும்.

ஆ) நிலையான வைப்பினை ஆரம்பிப்பதற்கும், பேணிச் செல்வதற்கும் கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

இ) மீதியை உறுதிப்படுத்தும் கட்டணங்கள் - வீசா தொடர்பான நடவடிக்கைகளுக்கு மீதியை உறுதிப்படுத்தும்பொருட்டு, ஒவ்வொரு உறுதிப்பாட்டிற்கும் ரூ.1000/= கட்டணமாக அறவிடப்படும்.

ஈ) வரி / கணக்காய்வு தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

உ) இந்தச் சான்றிதழின் முகப்பில் காட்டப்பட்டுள்ள காலப்பகுதிக்கு வைப்பு நிலையாகக் காணப்படும். முதிர்வுத் திகதிக்கு முன்னர் பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு விடுக்கப்படுகின்ற கோரிக்கையை நிராகரிக்கும் உரிமை கம்பனிக்கு உண்டு. எவ்வாறாயினும், குறைக்கப்பட்ட வட்டி வீதத்திற்கமைய அத்தகைய பணத்தை மீள எடுத்தலானது, முகாமைத்துவத்தின் தனிப்பட்ட விருப்பின் பேரில் கருத்திற்கொள்ளப்படலாம்.

**பிரதான விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

அ) 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

ஆ) வதிவிட வீசா அல்லது இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள வெளிநாட்டுப் பிரஜையாக இருத்தல்.

இ) அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான செல்லுபடியான ஆவணங்கள் (தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும்)

ஈ) 2022 ஒக்டோபர் மாதம் 11ஆந் திகதி வெளியிடப்பட்ட அடையாளத்தை அறிந்து கொள்ளும் இலக்கம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள பிரசித்த அறிவித்தலின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு செல்லுபடியான அடையாள ஆவணம் (இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தைப் பார்க்கவும்)

உ) ஆகக்குறைந்த ஆரம்ப வைப்பு - ரூ.5000/-

**கணக்கினைத் திறத்தல்**

தமது தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எமது தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகிலுள்ள கிளைக்கு வருமாறு அனைத்து சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடலின் பின்னர், உரிய வாடிக்கையாளரது தேவைப்பாட்டின் அடிப்படையில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டின் பின்னர், பணம் வைப்புச் செய்யும் செயற்பாடு ஆரம்பிக்கப்படுகின்றது. அவ்வாறே, நாம் எமது வாடிக்கையாளர்களது வீட்டிற்கு வந்து சேவைகளை வழங்கவும் தயாராகவுள்ளோம்.

**தேவையான ஆவணங்கள்**

i. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம்.
ii. தேசிய அடையாள அட்டையின் பிரதி
iii. அடையாளத்தை உறுதிப்படுத்தும்பொருட்டு ஆவணங்களின் பிரதி.
iv. வதிவிட வீசாவைக் கொண்ட வெளிநாட்டு வைப்பாளர்களுக்கு அவர்களது கடவுச் சீட்டு

**கணக்கை முடிவுறுத்தி மூடிவிடுதல்**

- வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய நிலையான வைப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை உரிய முதிர்வுக்கு முன்னர் சமர்ப்பிப்பதன் ஊடாக அக்கணக்கு முடிவுறுத்தப்பட்டு மூடப்படும்.
- வைப்பானது, சான்றிதழின் முகப்பில் காட்டப்பட்டுள்ள காலப்பகுதிக்கு நிலையாகக் காணப்படும் என்பதுடன் அதனை முன்னரே மூடிவிட முடியாது.
- எவ்வாறாயினும், முதிர்வுக்கு முன்னர் அத்தொகையை மீளப் பெறுதலானது, முகாமைத்துவத்தின் தனிப்பட்ட விருப்பின் பேரில் கவனத்திற் கொள்ளப்படும். அத்தகைய தொகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு, இலங்கை மத்திய வங்கியின் கட்டளைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், பொதுவான சேமிப்பு வீதத்திற்கமைய குறைக்கப்பட்ட வட்டி வீதத்திற்கும், அதற்கு மேலதிகமாக அறவிடப்படுகின்ற 2% வரம்பிற்கும் உள்ளாகும்.

**செயலிழந்த கணக்குகள் மற்றும் கைவிடப்பட்ட சொத்துக்கள்**

அ. கைவிடப்பட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பாக உரிய சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படும். (பரிந்துரைக்கப்பட்டவர், பயனாளி அதற்கு உரிமையுடையவர்)

ஆ. ஒழுங்குபடுத்தல் தேவைகளின் அடிப்படையில் கைவிடப்பட்ட நிலையான வைப்புக்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்படும்.

**சட்டரீதியான ஏற்பாடுகள்**

இதற்குரிய சட்டரீதியான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- ஒப்பந்தச் சட்டம்
- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகள்

**முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்**

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் தமது முறைப்பாடுகளை கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் முன்வைக்கலாம்.

அ) அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

ஆ) எமது உடனடி தொலைபேசி இலக்கமான 011 – 4711711 இற்கு அழைக்கலாம். (முறைப்பாடுகள் கிடைத்ததன் பின்னர் அதனை ஏற்றுக்கொண்டு அது தொடர்பில் உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வாடிக்கையாளர் அறிவுறுத்தப்படுவார்.)

இ) திரு.ஜூட் கம்லத் - பிரதிப் பொது முகாமையாளர், சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி – வாடிக்கையாளர் முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

**"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வரம்புக்கு மேலான கொடுக்கல் வாங்கல்கள் (1 மில்லியனுக்கு மேல்) நிதிப் புலனாய்வுப் பிரிவிற்கு அறிக்கையிடப்படும்."**